(7) 1969-70 ஆம் ஆண்டில் மிகைச் செலவிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "அடுத்து, 1969-70-ஆம் ஆண்டில் மிகைச் செலவிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு".

நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 21,490-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டி சட்டங்கள் நிர்வாகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டி சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,54,293-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 6—மாநில சட்ட மன்றம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 6—மாநில சட்ட மன்றம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,628-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 7—தேர்தல்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 7—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 57,569-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

...நிதிக் கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகம், பல்வகை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகம், பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 86,455-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,63,354-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 14—மருத்துவம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 14—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 65,50,818-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,68,062-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 26—பாசனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— "நிதிக் கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 54,13,495-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 27—பொதுப் பணிகள்—பணிகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— "நிதிக் கோரிக்கை எண் 27—பொதுப் பணிகள்—பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,75,13,997-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 29—பொதுப் பணிகள்—உதவி மானியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— "நிதிக் கோரிக்கை எண் 29—பொதுப் பணிகள்—உதவி மானியம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,17,325-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 30—சாலைப் போக்குவரத்துப் பணிகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— "நிதிக் கோரிக்கை எண் 30—சாலைப் போக்குவரத்துப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 33,624-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 33—பல்வகை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி— "நிதிக் கோரிக்கை எண் 33—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,93,744-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 38—பொதுச் சுகாதாரம் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி— "நிதிக் கோரிக்கை எண் 38—பொதுச் சுகாதாரம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,11,660-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

(8) அறிவிப்பு

(அ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவை இப்பேரவையில் அறிமுகம் செய்வதற்கும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

(3) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.